**செ. கு. எண்: 088** **நாள் :17.06.2016**

மாண்புமிகு அவை முன்னவர் மற்றும் நிதி மற்றும் பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களின் அறிக்கை – 17.6.2016

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று சட்டப் பேரவை வளாகத்தில் ஊடகங்களுக்கு பேட்டி அளித்துள்ளார். அப்போது ஒரு சில கோரிக்கைகளை மறுபரிசீலனை செய்ய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அக்கோரிக்கைகள் மீது முடிவெடுக்க சனி, ஞாயிறு என இரண்டு நாட்கள் பொறுத்திருந்து பார்ப்பதாகவும், இல்லையெனில் பிரச்சனையை எப்படிக் கையாள வேண்டும் என்று முடிவு செய்யப் போவதாகவும் தெரிவித்துள்ளார். அதாவது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இரண்டு நாள் கெடு கொடுத்துள்ளதாக ஆணவத்துடன் பேட்டியளித்துள்ளார். திமுக சார்ந்த மாலை பத்திரிகையான தமிழ் முரசு நாளிதழிலும், “சபாநாயகருக்கு இரண்டு நாள் கெடு; ஸ்டாலின் பரபரப்புப் பேட்டி” என்று தலைப்பிட்டே இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின், திமுக தலைவர் திரு.கருணாநிதி வீல் சேரில் எளிதில் வந்து செல்லும் வகையில் சிறப்பு இருக்கை வசதி ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை வைக்கப்பட்டது என்றும், ஆனால், திரு.கருணாநிதிக்கு இரண்டாவது வரிசையில் இடம் ஒதுக்கியுள்ளனர் என்றும் கூறியுள்ளார். இந்தக் கோரிக்கை ஒரு விந்தையான கோரிக்கை தான்.

திரு. கருணாநிதி **25.5.2016** அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்திற்கு வீல் சேரில் பேரவைக்குள் வந்து உறுதிமொழி எடுத்துள்ளார். அப்போது, தற்போது ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கை எண்.**207**–க்கு முன்பக்கத்தில் அவருடைய வீல்சேரில் அமர்ந்தபடியே திரு.கருணாநிதி உறுதிமொழி எடுத்துக் கொண்டார். அதை கருத்தில் கொண்டே இந்த இடம் திரு.கருணாநிதிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் ஒதுக்கப்பட்டுள்ளது. திரு.கருணாநிதி சட்டப் பேரவைக்குள் வந்து விவாதங்களில் பங்கேற்க வேண்டும் என்றால், அவர் உறுதிமொழி எப்படி எடுத்துக் கொண்டாரோ அதே போன்று கலந்து கொள்ள இயலும்.

திரு.கருணாநிதி சட்டப் பேரவை விவாதங்களில் பங்கேற்பது பற்றி அல்ல இந்தப் பிரச்சனை. இது உண்மையிலேயே தந்தைக்கும், தனயனுக்கும் உள்ள பிரச்சனை தான். நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் திமுக எதிர்க்கட்சி அந்தஸ்து பெற்றிருக்கிறது. திமுக என்றாலே திரு.கருணாநிதி தானே! திரு.கருணாநிதி தானே கட்சியின் தலைவர். அப்படி இருக்கும் போது சட்டமன்ற கட்சியின் தலைவர் அதாவது எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி அவருக்குத் தானே கிடைத்திருக்க வேண்டும். ஆனால், தங்களுக்குள்ள பிரச்சனையில், உட்கட்சி பிரச்சனையில், திமுக சட்டமன்ற கட்சித் தலைவராக திரு.மு.க.ஸ்டாலின் தன்னை தேர்ந்தெடுக்கச் செய்து விட்டார். துணைத் தலைவராக திரு.துரைமுருகன் அவர்களும், கொறடாவாக திரு.அர.சக்கரபாணி அவர்களும், துணைக் கொறடாவாக திரு.கு.பிச்சாண்டி அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அப்படியெனில், திமுக தலைவர் திரு.கருணாநிதியின் நிலை என்ன? வெறும் சட்டமன்ற உறுப்பினர் என்ற அந்தஸ்து தானே திரு. கருணாநிதி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறுள்ள நிலையில், திரு.கருணாநிதி சட்டமன்றத்திற்கு வந்து விவாதங்களில் பங்கேற்க மாட்டார் என்பதால், தன் மீது அந்தப் பழி வந்து விடக் கூடாது என்று கருதி, பிரச்சனையை திசை திருப்பும் விதமாக, திரு.கருணாநிதி அவர்களுக்கு சரியான இருக்கை ஒதுக்கப்படவில்லை என திரு.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேரவைத் தலைவருக்கு **26.5.2016** அன்று எழுதிய கடிதத்தில், திரு.மு. கருணாநிதியை தவிர மற்ற அனைத்து திமுக உறுப்பினர்களுக்கும் எந்தெந்த வரிசையில் இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என ஒரு பட்டியல் கொடுத்திருந்தார். அதில் திமுக தலைவர் திரு.மு.கருணாநிதியின் பெயர் இல்லவே இல்லை. திரு.கருணாநிதிக்கு எந்த இடம் எவ்வாறு ஒதுக்கப்பட வேண்டும் என திரு.மு.க.ஸ்டாலின் அந்தக் கடிதத்தில் குறிப்பிடவே இல்லை. அதாவது, திரு.கருணாநிதி சட்டமன்றத்திற்கு வருவதை திரு.ஸ்டாலின் விரும்பவே இல்லை என்பது இதிலிருந்தே தெளிவாகிறது.

பத்து நாட்கள் கழித்து, **6.6.2016** அன்று திமுக கொறடா திரு.அர.சக்ரபாணி அவர்கள் திரு.மு. கருணாநிதிக்கு இருக்கை வசதி வேண்டுமென ஒரு கடிதம் மூலம் கேட்டுக் கொண்டார். மேலும், திரு. அர. சக்ரபாணி அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து திரு. மு. கருணாநிதி அவர்களுக்கு, ஏற்கெனவே அவர் உறுதிமொழி எடுத்த இடத்தில் ஒரு இருக்கை வசதி செய்து கொடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு தான் பேரவைத் தலைவர் அவருக்கு இருக்கையை ஒதுக்கியுள்ளார்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் தனது பேட்டியில் **2001** ஆம் ஆண்டு திமுக உறுப்பினர் திரு. வை. பெருமாள் மறைவுற்ற போது, பேரவையை ஒத்தி வைக்காமல் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது என்று உண்மைக்கு மாறான தகவலைத் தெரிவித்துள்ளார். உண்மை என்னவென்றால், **16.8.2001** அன்று திமுக உறுப்பினர் திரு. வை. பெருமாள் அவர்கள் மறைவு குறித்து சட்டப் பேரவையில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப் பெற்று அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் பேரவை நாள் முழுவதும் ஒத்தி வைக்கப் பெற்றது.

மேலும், திரு.மு.க.ஸ்டாலின் அளித்துள்ள பேட்டியில், சட்டசபையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் கடைசி நாளன்று, எதிர்க்கட்சி தலைவர் உரையாற்றி, அதன்பின் மாண்புமிகு முதலமைச்சர் பதிலளிக்க வேண்டுமென்றும், இந்த முறையை மாற்றுவது எதிர்க்கட்சித் தலைவருக்கு உரிய மரியாதையை சிதைக்கும் வகையில் அமைந்துள்ளது எனவும், விவாதத்தில் மூன்று திமுக உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு வழங்க வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார். இவை பற்றியெல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவில் விரிவாக விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டுள்ளது. பேரவைத் தலைவரின் முடிவு குறித்து விமர்சிப்பதோ, பேட்டியளிப்பதோ அவையின் மரபுக்கு முரணானதாகும்.

பேரவை விதி **98**–ன்படி, ஒரு தீர்மானத்தின் மீது பேரவைத் தலைவர் அழைக்கிற வரிசையில் தான் உறுப்பினர்கள் பேச வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, பேரவை விதி **108**–ன்படி, பேரவைத் தலைவர், பேரவையின் விவாதத்திற்கு வரும் எப்பொருள் மீதேனும் நடைபெறும் விவாத உரைகளுக்கான கால வரம்பை பேரவைத் தலைவரே நிர்ணயிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த **14**–வது சட்டமன்றப் பேரவையில், திமுக உறுப்பினர்கள், பேரவையில் பேரவைத் தலைவர் பேசுவதற்கு நேரம் குறைவாக ஒதுக்குகிறார் என்றும், தங்களது ஜனநாயக உரிமையைப் பறிக்கிறார் என்றும், ஒவ்வொரு நாளும் பேரவைக்கு வெளியிலே பத்திரிகைகளுக்கு பேட்டியளிப்பதை வாடிக்கையாக கொண்டிருந்தனர். இதனைக் கருத்திற்கொண்டு பேரவையில் கடைபிடிக்கப்பட்டு வந்த நடைமுறையின் அடிப்படையில் பேரவைத் தலைவர் ஒவ்வொரு நாளும் **2** திமுக உறுப்பினர்கள் கூடுதல் நேரம் பேசலாம் என்றும், அதனால் அவர்கள் பேசுவதற்குரிய போதுமான அளவு நேரத்தை எடுத்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் பேரவைத் தலைவர் முடிவெடுத்துள்ளார் போலும்! **132** உறுப்பினர்களைக் கொண்டுள்ள அஇஅதிமுக சார்பாக **3** உறுப்பினர்கள் பேசலாம் என்னும் போது **89** உறுப்பினர்கள் கொண்ட திமுகவைச் சார்ந்த **2** உறுப்பினர்கள் தானே பேச இயலும். அதே போன்று, கடந்த ஐந்து வருடங்கள் பேரவையில் கடைபிடித்த

நடைமுறையைப் பின்பற்றி, ஆளுநர் உரை மீதான விவாதத்தின் கடைசி நாளுக்கு முதல் நாள் எதிர்க்கட்சித் தலைவர் உள்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும் பேசிய பின் கடைசி நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவரகள் உரையாற்றலாம் என்று பேரவைத் தலைவர் எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவித்துள்ளார்.

இன்று, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பேரவைத் தலைவர் அறைக்கு, திமுக உறுப்பினர்களுடன் சென்று தனது கோரிக்கை பற்றி எடுத்துக் கூறும் போது திமுகவைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ.அன்பழகன் அவர்கள் பேரவைத் தலைவரை ஒருமையில் பேசி இழிவுபடுத்தியுள்ளார். இதைக் கண்டும் காணாமல் திரு.மு.க.ஸ்டாலின் அமைதி காத்துள்ளார். இந்த விவரத்தை பேரவைத் தலைவரே என்னிடம் தெரிவித்து வருத்தப்பட்டார். இவ்வாறு பேரவைத் தலைவரை உறுப்பினர் ஒருவர் ஒருமையில் பேசி அவமானப்படுத்தும்போது திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திரு.அன்பழகனை கண்டித்திருக்க வேண்டாமா? அவ்வாறு செய்யாமல், வேடிக்கைப் பார்ப்பது தான் மரபுகளை கடைபிடிக்கும் முறையா?

தி.மு.க.வின் தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.கருணாநிதி அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் தொடர்ந்து கருத்து வேறுபாடுகள், மனமாச்சரியங்கள், சச்சரவுகள் உள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இரண்டு நாட்களுக்கு முன்னர், திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட திரு.கருணாநிதி புறக்கணித்து விட்டதாக ஊடகங்கள் தெரிவித்தன. திரு.கருணாநிதியை ஔரங்கசீப்புடன் ஒப்பிட்டு முகநூலில் திமுகவினர் கருத்து வெளியிட்டுள்ளனர். அது பற்றி திரு.கருணாநிதியின் ஆதரவாளர்களும், திரு.ஸ்டாலினின் ஆதரவாளர்களும் மாறி மாறி ஒருவரையொருவர் தாக்கி பதிவுகள் வெளியிட்டு வருகின்றனர். இப்படியெல்லாம் திரு.கருணாநிதியின் குடும்பத்துக்குள்ளேயே உள்ள பிரச்சனைகளை மறைப்பதற்காக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின், பேரவைத் தலைவர் மீது குற்றம் சாட்டி, பொய்யான தகவல்களை தெரிவித்து, அதன் மூலம் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை திரு.கருணாநிதியிடமிருந்து தட்டிப் பறித்ததை மறைத்து விடலாம் என்று எண்ணினால் திரு.மு.க.ஸ்டாலின் ஏமாந்து தான் போவார். பேரவைத் தலைவருக்கு இரண்டு நாள் கெடு விதிக்கும் இது போன்ற வீராப்பு பேச்சுகளை பல முறை தமிழக மக்கள் பார்த்து சலிப்படைந்துள்ளனர். எதிர்க்கட்சித் தலைவரும், திமுகவினரும் **20.6.2016** முதல் சட்டமன்றத்திற்கு வந்து ஆக்கபூர்வமான விவாதங்களில் பங்கேற்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**திரு.ஓ.பன்னீர்செல்வம்,**
அவை முன்னவர் மற்றும்
நிதி மற்றும் பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**